15

# சித்தர்கள்

ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லைச்
சீலமிலைத் தவமில்லை விரதமோடாச் சிரமச்
செயலில்லைத் தியானமிலைச் சித்தமலம் இல்லை
கோலமிலைப் புலனில்லைக் கரணம் இல்லை
குணம் இல்லைக் குறியில்லைக் குலமும் இல்லை
பாலருடன் உன் மத்தர் பிசாசர் குணம் மருவிப்
பாடலினோ டாடலிவை பயின்றிடினும் பயில்வர் - சிவஞான சித்தியார் -

சித்துக்களில் வல்லவர்கள் சித்தர்கள் ஆவர். அவர்கள் பல வகையான சித்துக்களை (அற்புதங்களை)ச் செய்தமையால் சித்தர்கள் எனப் பெயர் பெற்றனர். சித் என்றால் அறிவு. அறிவு வடிவமாகத் தம்மை ஆக்கிக் கொண்டவர்கள் சித்தர்கள் எனவும் பொருள் கூறப்படும். சித்தர்கள் அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமா சித்திகளிற் கைதேர்ந்தவர்கள். யோக மார்க்கத்தில் வல்லவர்கள். யோக நெறி நின்று, பல சித்திகளைப் பெற்றவர்கள். சித்தர்கள் சாதி, சமய, ஆசாரக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள். சித்தர்கள் உடலைத் திடமாக வைத்திருப்பதற்கும் நீண்ட நாள் வாழ்வதற்கும் வைத்தியத் துறையில் ஆராய்ச்சி செய்து கண்டமுறை **சித்த வைத்தியம்** எனப்படும்.

தமிழகத்திலும், ஈழத்திலும் சித்தர்கள் பலர் இருந்திருக்கின்றனர். ஆயினும், தமிழ் நாட்டில் சித்தர் மரபொன்று நெடுங்காலமாக இருந்து வருகின்றது. அச்சித்தர்கள் பதினெண்மரெனக் கூறுவது மரபாகும். அகத்தியர், திருமூலர், சிவவாக்கியர், பட்டினத்தார், பத்திரகிரியார், அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், கடுவெளிச் சித்தர், அழுகணிச் சித்தர், கொங்கணச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், கருவூரார், மதுரை வாலைசாமி, கணபதிதாசர், உரோம ரிஷி, சட்டைமுனி, இராமதேவர் முதலானோர் பதினெண்சித்தர்களில் அடங்குவர். ஈழத்திலும் பெரியானைக்குட்டிச் சித்தர், சித்தானைக்குட்டிச் சித்தர், நவநாதச் சித்தர், கடையிற் சுவாமிகள், யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், என ஞானியர் பலர் இருந்திருக்கின்றனர். அவர்களில் கடையிற் சுவாமிகள், யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் ஆகியோர் பற்றிச் சுருக்கமாக கற்போம்.

### (1) கடையிற் சுவாமிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஈழநாட்டிற் கடையிற் சுவாமி முதலான சித்தர்கள் வாழ்ந்தனர். கடையிற் சுவாமிகளின் பெங்களூரில் நீதிபதியாக இருந்தபோது குற்றவாளிக்கு மரணதண்டனை விதிக்க மனமொப்பாமையினால், அதனைத் துறந்துவிட்டு, ஈழம் வந்தவர் என்பர். கடையிற் சுவாமிகள் பெரும்பாலும் யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதியிற் காணப்பட்டமையால் அவர் **கடையிற் சுவாமிகள்** என்றழைக்கப்பட்டார். சுவாமிகளின் தோற்றம் வசீகரிக்கும் தன்மையது. கடையிற் சுவாமிகள் அற்புதங்கள் பல புரிந்துள்ளார். பெரிய கடையிற் கடை வைத்திருந்தவர்கள், சுவாமிகளுக்கு ஏதேனுமொரு பொருளைக் கொடுத்தால் தங்கள் வியாபாரம் செழித்தோங்குமெனக் கருதினர். கடையிற் சுவாமிகளுக்கு வயிரமுத்துச் செட்டியார், சின்னச்சுவாமி, குழந்தைவேற் சுவாமி, சடைவரதர், செல்லப்பா சுவாமி போன்ற பலதரப்பட்ட சீடர்கள் இருந்தனர். யாழ்ப்பாணம் நீராவியடியில் தம் இறுதிக் காலத்தைக் கழித்த கடையிற் சுவாமிகள் 1891 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பூரட்டாதி நட்சத்திரத்தில் சமாதிநிலை எய்தினார்.

### (2) செல்லப்பா சுவாமி

செல்லப்பா சுவாமி, நல்லூர்க் கோயில் வீதியில் கடையிற் சுவாமியைத் தமது சற்குருவை கண்டு கொண்டார். ஒருநாள் கடையிற் சுவாமிகளைக் காண, பெரிய கடைக்குச் சென்றார். குருவின் வழியில் தொடர்ந்து, உலகம் போற்றும் உத்தம ஞானியானார். அரச உத்தியோகத்தைத் துறந்து ஆன்மீக விடுதலை நாடி வந்த சதாசிவனின் பக்குவநிலையை உணர்ந்த செல்லப்பா சுவாமிகள், அவரைத் தம் சீடராக்கி, ஐந்து ஆண்டுகள் பயிற்சி அளித்து யோகர் சுவாமிகளாக்கினார். செல்லப்பா சுவாமிகள் தம் சீடரை அழைத்துக் கொண்டு கால்நடையாக நெடுந்தூரம் ஊர் சுற்றக் கிளம்பிவிடுவார். அப்போது தாம் பெற்ற அனுபூதி ஞானத்தைச் சூத்திரம் போன்ற சிறுசிறு வாக்கியங்களாகச் செல்லப்பா சுவாமிகள் சீடருக்குக் கூறுவார். பக்குவ நிலையிலிருந்த சீடர்களுக்கு ஒவ்வொரு வார்த்தையும் முழு நூல் போல விளக்கமளித்தன.



இலவச விநியோகத்திற்காக

செல்லப்பா சுவாமிகள், நல்லூர்க் கந்தனது பெரியதேர் தங்கிநிற்கும் தேரடிக் கட்டடத்தின் படிகளை அடுத்து நின்ற வில்வமரத்தின்கீழ் நிட்டை கூடி இருப்பது வழக்கமாகும். அவர் ஒரு முறை நிட்டை கூடினால் நாட்கணக்காக அப்படியே தியானத்தில் ஆழ்ந்திருப்பார். பின்னர், நிட்டை கலையும். அவருடைய பேச்சும், நடத்தையும் பொது மக்களுக்கு விந்தையாக இருக்கும். அதனால், அவரை ''விசர்ச் செல்லப்பா'' என அழைத்ததுமுண்டு. ஊரூராய்த் திரியும் போதும் தமக்குள்ளே தாமே பேசிக் கொண்ட வார்த்தைகளான **''எல்லாம் செப்படி வித்தை'', ''அப்படியே உள்ளது'', ''ஒரு பொல்லாப்பும் இல்லை'', ''முழுவதும் உண்மை'', ''ஒருவருக்கும் தெரியாது'', ''ஆர் அறிவார்''** முதலான வாக்கியங்கள், செல்லப்பா சுவாமிகளிடமிருந்து அடிக்கடி வெளிப்பட்டன. இவையே பின்னாளில் அவரது சீடரான யோகர் சுவாமிகளுக்கு மகாவாக்கியங்களாக அமைந்தன. செல்லப்பா சுவாமிகள் 1915 ஆம் ஆண்டு பங்குனி மாதம் மகாசமாதி அடைந்தார்.

### (3) யோகர் சுவாமிகள்

யோகர் சுவாமிகளது பிள்ளைத் திருநாமம் ''சதாசிவம்''என்பதாகும். செல்லப்பா சுவாமிகளின் சீடரான யோகர் சுவாமிகள் ஐம்பதாண்டுகளுக்கு மேற் சிறந்த ஞானியாக விளங்கினார். நாவலரைப் பின்பற்றிச் சைவ சமய பரிபாலனமும் செய்து வந்தார். சித்தர் மரபும் வேதாகம மரபும் அவரிடம் சங்கமமாயின. திருமுறைகளை முறையாக ஓதியும் ஓதுவித்தும் அவற்றுக்கு வகுப்புக்களை நடத்தியும் வந்தார்; புராணபடனத்திற்கும் புத்துயிர் கொடுத்தார். சித்தாந்தசாத்திர வகுப்புக்களை நடாத்தி வந்தார்.

சுவாமிகள் ஒரு நாள் தம் குருவைத் தரிசித்தார்கள். பின் தேர்முட்டியின் மேற்படியிலிருந்து நாற்பது நாட்கள் இரவுபகலாக யோக நிட்டையிலிருந்தார். அதன் பின் குருவின் கட்டளைப்படி அன்பர்கள் வழங்கிய உணவை உண்ணத் தொடங்கினார். அன்றிலிருந்து மக்கள் அவரை, **''யோகர் சுவாமிகள்''** என்று அழைக்கலாயினர். செல்லப்பா சுவாமிகள் சமாதியடைந்த பின்னர், யோகர் சுவாமிகள் கொழும்புத் துறைக்குச் சென்று, அங்கே வாழ்ந்து வந்தார். அவரின் பெருமைகளை அறிந்த மக்கள் அவரிடஞ் சென்றனர். தஞ்சமென்று வந்தவர்களுக்கு இவர் உய்யும் நெறிகளை வகுத்தளித்தார்.

சுவாமிகள் தம் அடியார்களின் நன்மைக்காக, **''சிவதொண்டன்''** என்ற மாத இதழைத் தொடங்கினார். அத்துடன், ''சிவதொண்டன் நிலையங்களை'' யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பில் செங்கலடியிலும் நிறுவினார். யோகர் சுவாமிகள் தம் அன்பர்களுக்கு கவிதையிலும், உரையிலும் கூறிய உபதேசங்கள் **''நற்சிந்தனை''** என வழங்கப்படுகின்றது.

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சித்தர்கள் எனப்படுவோர் யாவர்?
2. தமிழக சித்தர்கள் நால்வரையும், ஈழத்து சித்தர்கள் நால்வரையும் பெயரிடுக?
3. செல்லப்பா சுவாமிகள் அருளிய மகாவாக்கியங்கள் எவை?

**செயற்பாடு**

1. செய்திப்பத்திரிகையில் வரும் சித்தர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து, வகுப்பில் காட்சிப்படுத்துக.
2. அட்டமாசித்திகளை எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

**பாடச்சுருக்கம்**

- ஈழத்து ஞானியரில் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.
- கடையிற் சுவாமிகளின் சீடர் செல்லப்பா சுவாமிகள் ஆவார்.
- செல்லப்பா சுவாமிகளின் சீடர் யோகர் சுவாமிகள் ஆவார்.
- யோகர் சுவாமிகள் தம் அடியார்களின் நன்மைக்காக, ''சிவதொண்டன்'' என்ற மாத இதழையும், ''சிவதொண்டன் நிலையங்களை'' யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பில் செங்கலடியிலும் நிறுவினார்.
- யோகர் சுவாமிகள் கூறிய உபதேசங்கள் ''நற்சிந்தனை'' எனப்படும்.



இலவச விநியோகத்திற்காக